# வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

5

தரம் 10

## கணக்கீட்டுச் சமன்பாடுகள்

Commerce and Business Studies Bra

கீழே தரப்பட்டுள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டு இலக்கம் 01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்கு விடை தருக.

சளகவின் வணிகத்தின் தை மாதம் 01ம் திகதிக்கான கணக்கீட்டுச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| சொத்துக்கள்(ரூபா.) | = | உரிமையாண்மை(ரூபா.) | + | பொறுப்புக்கள் (ரூபா.) |
| 150,000 | = | 90,000 | + | 60,000 |

தை மாதம் முதலாம் வாரத்தினுள் பின் வரும் நிகழ்வுகள் நடைபெற்றன.

A - ரூபா. 20,000 ஆன பண்டங்களை காசுக்குக் கொள்வனவு.

B - ரூபா. 25,000 ஆன பண்டங்களை கடனுக்குக் கொள்வனவு.

C - ரூபா.30,000 பெறுமதியான பண்டங்களை ரூபா.45,000 இற்கு காசுக்கு விற்பனை.

D - கடன் கொடுத்தோருக்கு செலுத்தியது ரூபா.15,000

01. மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் வணிகத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு ?

I. ரூபா. 135 000 II. ரூபா.150 000
III. ரூபா. 160 000 IV. ரூபா. 175 000

02. மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் வணிகத்தின் மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி எவ்வளவு ?

I. ரூபா. 50 000 II. ரூபா.60 000
III. ரூபா. 70 000 IV. ரூபா. 85 000

03. மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் சொத்துக்களின் மீதியில் வேறுபாட்டை ஏற்படுத்தாத கொடுக்கல் வாங்கல் எது?

I. A
II. B
III. C
IV. D

04. மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் வணிகத்திக் இலாபம் எவ்வளவு ?

I. ரூபா. 5 000
II. ரூபா.10 000
III. ரூபா. 15 000
IV. ரூபா..20 000

05. தை மாத முதலாம் வார இறுதியில வணிகத்தின் முழு உரிமையாண்மையின் பெறுமதி எவ்வளவு ?

I. ரூபா. 100 000
II. ரூபா. 105 000
III. ரூபா. 110 000
IV. ரூபா. 120 000

06. சணுகவினுடைய வணிகத்தின் 2021 தை மாதத்துக்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன.

2021.01.01 ஆம் திகதிக்கு மூலதனம் ரூபா. 560,000

தை மாதத்தில் வருமதி ரூபா. 280,000

தை மாதத்தில் செலவுகள் ரூபா. 130,000

தை மாதத்தில் சணுக ஈடுபடுத்திய நிதி ரூபா 70,000

தை மாத இறுதியில் சணுக வணிகத்தின் உரிமையாண்மையின் பெறுமதி எவ்வளவு?

I. ரூபா. 540 000
II. ரூபா. 600 000
III. ரூபா. 710 000
IV. ரூபா. 780 000

இலக்கம் 07 இல் இருந்து 10 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடை தருக.

- சாமற வணிகத்தின் 2021.01.01 ஆம் திகதி அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினதும் மீதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மரத் தளபாடங்கள் | ரூபா.300,000 |
| இருப்புத் தொகை | ரூபா.180,000 |



Commerce and Business Studies Branch

| | |
|---|---|
| கடன் கொடுத்தோர் | ரூபா.50,000 |
| வங்கிக் கடன் | ரூபா100,000 |
| கையிலுள்ள பணம் | ரூபா. 30,000 |
| உரிமையாண்மை | ரூபா.360,000 |

தை மாதத்தில் கீழ் வரும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன.

1. ரூபா.50,000 இற்கு கடனுக்குப் பொருட்கள் கொள்வனவு.
2. கட்டட வாடகை கொடுத்தது ரூபா.20,000
3. ரூபா.80,000 பெறுமதியான பொருட்கள் ரூபா.120,000 இற்குக் காசுக்கு விற்பனை

07. மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னரான காசு மிகுதியாக அமைவது,

I. ரூபா. 100 000
II. ரூபா. 110 000
III. ரூபா. 120 000
IV. ரூபா. 130 000

08). மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னரான வணிகத்தின் உரிமையாண்மை எவ்வளவு?

I. ரூபா. 300 000
II. ரூபா. 360 000
III. ரூபா. 350 000
IV. ரூபா. 380 000

09). மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னரான வணிகத்தின் இருப்புத் தொகை எவ்வளவு?

I. ரூபா. 150 000
II. ரூபா. 160 000
III. ரூபா. 180 000
IV. ரூபா. 200 000

10). மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னரான வணிகத்தின் முழுச் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு?

(1) ரூபா. 500 000
(2) ரூபா. 580 000
(3) ரூபா. 600 000
(4) ரூபா. 680 000

11) சாகற வணிகத்தின் 2021.03.01 ஆம் திகதி அடிப்படை கணக்கீட்டு சமன்பாடு வருமாறு

| சொத்துக்கள் | = | உரிமையாண்மை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|
| 200,000 | = | 150 000 | + | 50 000 |

- ரூபா. 20 000 இற்குப் பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன .

Commerce and Business Studies Branch

மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களைக் கருத்தில்க் கொண்டு மிகச் சரியான கணக்கீட்டுச் சமன்பாடாக அமைவது,

| | |
|---|---|
| சொத்து = உரிமையாண்மை + பொறுப்பு | சொத்து = உரிமையாண்மை + பொறுப்பு |
| I. 180 000 = 150 000 + 30 000 | II. 220 000 = 170 000 + 50 000 |
| III. 220 000 = 150 000 + 70 000 | IV. 180 000 = 130 000 + 50 000 |

12) வணிகத்தின் சொத்துக் கணக்குகளில் மட்டும் அடங்குபவை,

I. ரூபா.5 000 இற்கு பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு.
II. ரூபா.60 000 இற்கு மரத்தளபாடங்கள் உரிமையாளரினால் வணிகத்திற்கு ஈடுபடுத்தப்பட்டது.
III. ரூபா. 4 000 பணம் கடன் கொடுத்தோருக்கு செலுத்தப்பட்டது.
IV. ரூபா. 3 000 பணம் கடன் பட்டோரிடமிருந்து பெறப்பட்டது.

13) வணிகத்தின் உரிமையாண்மையில் அதிகரிப்பினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலாக அமைவது.

I. ரூபா 2 000 கிரயத்தினைக் கொண்ட பொருட்கள் ரூபா.1 500 இற்குக் காசுக்கு விற்கப்பட்டது.
II. ரூபா. 50 000 வணிகத்தின் வங்கிக்கடன் உரிமையாளரின் சொந்தப் பணத்தினால் செலுத்தப்பட்டது.
III. வணிகத்தின் மின்கட்டணம் ரூபா. 3 000 செலுத்தப்பட்டது.
IV. ரூபா. 4 000 பெறுமதியான பொருட்கள் உரிமையாளரினால் சொந்தத் தேவைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

14) வணிகத்தின் உரிமையாண்மையில் குறைவினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கலாக அமைவது,

I. வணிகத்தின் தொலைபேசி கட்டணம் ரூபா. 6 000 செலுத்தியமை.
II. வணிகத்தின் உரிமையாளர் ரூபா. 10 000 முலதனமாக ஈடுபடுத்தியமை.
III. நிலையான வைப்பு வட்டி ரூபா. 4 000 பெறப்பட்டது.
IV. ரூபா. 80 000 பெறுமதியான மரத் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது.

15) 2021.1.1 ஆம் திகதி கணக்கீட்டுச் சமன்பாடானது பின்வருமாறு அமைந்துள்ளது.

சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள்

30 000 = 20 000+10 000

2021.01.10 ஆம் திகதி நடைபெற்ற கொடுக்கல் வாங்கலின் பின்னர் கணக்கீட்டுச் சமன்பாடானது பின்வருமாறு அமைந்துள்ளது.

சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள்

26 000=19 000+7 000

Commerce and Business Studies Branch

மேற்குறித்த 2021.01.10 ஆம் திகதி நடைபெற்ற கொடுக்கல் வாங்கலாக அமையக்கூடியது?

I. ரூபா. 4 000 கிரயமுடைய பொருட்கள் ரூபா. 3 000 இற்கு விற்கப்பட்டன.
II. ரூபா. 1 000 கழிவினை அனுமதித்து ரூபா. 4 000 கடன் பட்டோரிடமிருந்து பெறப்பட்டது
III. ரூபா. 4 000 வங்கிக் கடன் தவணைக் கட்டணம் ரூபா. 1 000 கடன் வட்டியுடன் செலுத்தப்பட்டது.
IV. ரூபா. 1000 பெற்ற கழிவுடன் கடன் கொடுத்தோருக்கு ரூபா. 4 000 பணம் செலுத்தப்பட்டது.

றவிமல்லினுடைய வணிகத்தின் 2021/03/01 ஆம் திகதி கணககீட்டுச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

சொத்துக்கள் = உரிமையாண்மை + பொறுப்புக்கள்

60 000 = 40 000+ 20 000

❖ பங்குனி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன.

A. கடன் கொடுத்தோருக்கு செலுத்திய பணம் ரூபா. 6 000

B. வணிகத்தின் தொலைபேசி கட்டணம் செலுத்தியது ரூபா. 4 000

C. ரூபா.8 000 பெறுமதியான பொருட்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது

D. கிரயம் ரூபா.6 000 ஆன பொருட்கள் ரூபா.10 000 இற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டன.

மேற்குறித்த வியங்களை கருத்தில் கொண்டு பின்வரும் 16,17,18 ஆகிய வினாக்களுக்கு விடைதருக.

16) மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னரான பொறுப்புக்களின் பெறுமதியாக அமைவது,

I. ரூபா. 22 000
II. ரூபா. 18 000
III. ரூபா. 38 000
IV. ரூபா. 20 000

17) மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களில் உரிமையாண்மையில் மட்டும் மாற்றத்தினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களாவன,

I. A மற்றும் C
II. B மற்றும் C
III. A மற்றும் B
IV. B மற்றும் D

18) பங்குனி மாதத்தின் இறுதியில் காணப்படும் கணககீட்டுச் சமன்பாடாக அமைவது,

சொத்துக்கள்=உரிமையாண்மை+ பொறுப்புக்கள் சொத்துக்கள்=உரிமையாண்மை+ பொறுப்புக்கள்

I. 62 000 = 36 000 + 26 000
II. 62 000 = 40 000 + 22 000
III. 60 000 = 40 000 + 22 000
IV. 60 000 = 36 000 + 24 000

19) கீழ்வரும் சமன்பாடுகளில் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டினைத் தெரிவு செய்க.

I. சொத்துக்கள்=உரிமையாண்மை-பொறுப்புக்கள்
II. பொறுப்புக்கள்= உரிமையாண்மை-சொத்துக்கள்
III. உரிமையாண்மை=சொத்துக்கள்- பொறுப்புக்கள்
IV. சொத்துக்கள்=பொறுப்புக்கள்+ உரிமையாண்மை

Commerce and Business Studies Branch

20) மின்சார செலவு ரூபா. 6 000 செலுத்தியதால் வணிகத்தில்,

I. சொத்து ரூபா. 6 000 அதிகரிக்கும், உரிமை ரூபா. 6 000 அதிகரிக்கும்.
II. சொத்து ரூபா. 6 000 அதிகரிக்கும், சொத்து ரூபா. 6 000 குறையும்.
III. சொத்து ரூபா. 6 000 குறையும், உரிமை ரூபா.6 000 குறையும்.
IV. சொத்து ரூபா. 6 000 அதிகரிக்கும்.பொறுப்பு ரூபா. 6 000 அதிகரிக்கும்.

21) ஜனஹித வணிகத்தின் கடன் மீதி ரூ. 70,000 ஆகும். ஒரு மாதத்திற்குள் கடன்பட்டோரின் ரூ. 10,000 கழிவுடன் காசு பெறப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்களில் கணக்கீட்டு சமன்பாட்டில் சரியான விடை யாது?

I.

| சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|
| - 70 000 கடன்பட்டோர் | - 10 000 + கொடுத்த கழிவு | |
| + 60 000 காசு | | |

II.

| சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|
| + 60 000 காசு | +10 000 கொடுத்த கழிவு | - 70 000 கடன் கொடுத்தோர் |

III.

| சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|
| - 60 000 காசு | + 10 000 + பெற்ற கழிவு | |
| + 70 000 கடன்பட்டோர் | | |

IV.

| சொத்து | = உரிமை | + பொறுப்பு |
|---|---|---|
| + 70 000 காசு | - 10 000 பெற்ற கழிவு | - 60 000 கடன் கொடுத்தோர் |

**22.** 2021/01/01 யில் அமல் வணிகத்தின் மீதிகள் வருமாறு,

| | |
|---|---|
| காசு | ரூபா.60 000 |
| கடன்பட்டோர் | ரூபா.20 000 |
| கடன் கொடுத்தோர் | ரூபா.30 000 |
| வங்கிக் கடன் | ரூபா.100 000 |
| காணி கட்டடம் | ரூபா.200 000 |

தேவையானது:- 2021/1/1 இன் உரிமையான்மையை கணிப்பிடுக.

23. சுஜிவனின் வணிகத்தின் 2021ம் ஆண்டின் தகவல்கள் வருமாறு,

| | |
|---|---|
| மூலதனம் (2021/01/01 திகதி) | ரூபா 300 000 |
| பற்று | ரூபா. 30 000 |
| ஆண்டில் உரிமையாளர் கொண்டு வந்த காசு | ரூபா 100 000 |
| வருட செலவு | ரூபா. 60 000 |
| வருட வருமானம் | ரூபா .90 000 |

மேலே தரப்பட்ட தகவல்களை கருத்திற் கொண்டு 2021.12.31ற்கான உரிமையான்மையை காண்க.



Commerce and Business Studies Branch

24. ஜயனின் வணிகத்தின் 2021 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு,

2021.01.01இல் மீதிகள் வருமாறு,

| | | | |
|---|---|---|---|
| சொத்து | - | மரத்தளபாடம் | ரூபா 200 000 |
| | | பொருட்கள் தொகை | ரூபா 100 000 |
| | | காசு | ரூபா 60 000 |
| | | கடன் பட்டோர் | ரூபா 20 000 |
| பொறுப்பு | - | வங்கிக் கடன் | ரூபா.100 000 |
| | | கடன் கொடுத்தோர் | ரூபா 50 000 |

ஜனவரி மாதத்தில் கீழ்வரும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றன.

1. உரிமையாளரால் ரூ. 80 000 வணிகத்துக்கு கொடுக்கப்பட்டது.
2. ரூபா.10 000 பொருட்கள் கடனுக்கு கொள்வனவு.
3. வணிகத்திலிருந்து ரூ.20 000 பொருட்கள் ஜயன்தவினால் பற்றுப்பட்டது.
4. ரூபா.8 000க்கு வாங்கிய பொருட்கள் ரூ.15 000இற்கு விற்பனை செய்யப்பட்டது.
5. ரூபா.100 000 வங்கிக் கடன் பெறப்பட்டது.
6. ரூபா.6 000 கடன் கொடுத்தோருக்கு செலுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களில் பெறுமானத்துடன் கீழே உள்ள மாதிரியில் குறிப்பிடுக.
விடை எழுதும் போது பெறுமானம் அதிகரித்தால் (+) குறியீடும் பெறுமானம் குறைந்தால் (-) குறியீடும் இடுக.

| தொ. இல. | சொத்து | | | | உரிமை | பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| 2021.01.01 | தளபாடம் | பொருட்கள் | காசு | கடன்பட்டோர் | | கடன்கொடுத்தோர் | வங்கி கடன் |
| மீதி<br>(1)<br>(2)<br>(3)<br>(4)<br>(5)<br>(6) | | | | | | | |

புள்ளி 06

25. பேரேட்டுக் கணக்குகளுக்கான உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை பிரதான பேரேட்டுக வகைகளுக்குள் உட்படுத்துக.

- காசு, முதலீடு, முதலீட்டு வருமானம், கொள்வனவு
- கடன் கொடுத்தோர், விற்பனை, உட்சுமைக் கூலி, விளம்பரம், வங்கிக் கடன் வட்டி
- வங்கிக் கடன், பெற்ற கழிவு, கொடுத்த கழிவு, வங்கிக் கட்டணம், மேலதிக பற்று வட்டி
- பற்று, மூலதனம், வீட்டு வாடகை, வீட்டு வாடகை வருமானம்
- மின்சாரம், பங்கு வாபம், ஊழியர் சம்பளம்

Commerce and Business Studies Branch

- பெற்ற வட்டி, தளபாடத் தேய்வு,இயந்திரப் பெறுமானத் தேய்வு,அறவிட முடியாக் கடன்
- கடன்பட்டோர், இயந்திர உபகரணம்
- தளபாடம், பெறவேண்டிய முதலீட்டு வருமானம்
- அட்டுறு மின்சாரம், அட்டுறு கடன் வட்டி

| சொத்து | செலவுகள் | உரிமை | வருமானம் | பொறுப்பு |
|---|---|---|---|---|
| | | | | |

26. வணிகதிதில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களின் தாக்கம் கணக்கீட்டு சமன்பாடில் கீழே காட்டப்பட்டுள்ளது.

| திகதி | சொத்து | = | உரிமை + | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 5/1 | அதிகரிக்கும் | = | அதிகரிக்கும் | |
| 5/5 | அதிகரிக்கும் | = | | அதிகரிக்கும் |
| 5/8 | குறையும் | = | குறையும் | |
| 5/10 | குறையும்<br>அதிகரிக்கும் | =<br>= | அதிகரிக்கும் | |
| 5/15 | அதிகரிக்கும்<br>குறையும் | | | |
| 5/18 | குறையும் | = | குறையும் | குறையும் |

மேலே குறிக்கப்பட்ட தாக்கங்களை பெறுமானங்களுடன் குறிப்பிடுக.

27. 2021 மார்ச் மாதத்திற்கான ஜயனின் வியாபாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மார்ச் 01 | ரூபா.100 000 மூலதனம் இடப்பட்டது. |
| மார்ச் 03 | ரூபா.30 000 க்கு காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது. |
| மார்ச் 04 | வணிகத்தின் மின்சாரக் கட்டணம் ரூபா. 2 000 செலுத்தப்பட்டது. |
| மார்ச் 08 | ரூபா. 12 000 பெறுமதியான பொருட்கள் ரூபா.15 000க்கு கடனுக்கு விற்கப்பட்டது. |
| மார்ச் 10 | ரூபா. 9 000 வட்டி வருமானம் கிடைத்தது.. |
| மார்ச் 15 | ஜயனின் வீட்டு மின்சாரக் கட்டணம் ரூபா. 2 000 செலுத்தப்பட்டது. |
| மார்ச் 18 | கடன்பட்டோரிடமிருந்கு ரூபா. 6 000 கிடைக்கப்பெற்றது. |
| மார்ச் 20 | கடன் கொடுத்தோருக்கு ரூபா. 5 000 செலுத்தப்பட்டது. |
| மார்ச் 25 | வங்கி கடன் ரூபா. 50 000 பெறப்பட்டது. |

மேற்குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் தாக்கத்தை அடிப்படை கணக்கீட்டு சமன்பாட்டில் குறிப்பிடுக. (முதலாவது கொடுக்கல் வாங்கல் எடுத்துக்காட்டாக தரப்பட்டுள்ளது)

| திகதி | சொத்து | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| 3/1 | + 100 000<br>காசு | | + 100 000<br>மூலதனம் | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

Commerce and Business Studies Branch

28. கீழே குறிப்பிடப்படுவது ரஸாலித வணிகத்தின் 2022 ஜனவரி மாதத்தில் முதலாம் திகதியில் காணப்பட்ட கணக்கு மிகுதிகளாகும்.

| | |
|---|---|
| காசு | ரூபா. 120 000 |
| சரக்கிருப்பு | ரூபா. 80 000 |
| கடன்பட்டோர் | ரூபா. 30 000 |
| கடன்கொடுத்தோர் | ரூபா. 30 000 |
| வங்கிக் கடன் | ரூபா. 60 000 |

ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழ்வருமாறு,

1) ரூபா. 20 000 பெறுமதியான சரக்கிருப்பு ரூபா. 35 000க்கு கடனுக்கு விற்கப்பட்டது.
2) கடன்கொடுத்தோருக்கு ரூபா. 15 000 காசாக கொடுக்கப்பட்டது.
3) காசுக்கு கொள்வனவு ரூபா. 14 000.
4) வணிகத்தின் மின் கட்டணம் ரூபா. 6 200 காசாக செலுத்தப்பட்டது.
5) செலுத்திய வங்கி கடன் தவணைக் கட்டணம் ரூபா.2000. அதில் உள்ளடங்கிய வட்டி ரூபா. 500
6) ரூபா.15 000 பெறுமதியான சரக்கிருப்பு ரூபா. 32 000க்கு விற்கப்பட்டது.
7) உரிமையாளரின் பொருள் பற்று ரூபா. 4 000

உங்களிடம் வேண்டப்படுவது

I. 2021/01/01 திகதிக்கான உரிமையான்மையைக் காண்க.
II. மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களை காசு+சரக்கிருப்பு+கடன்பட்டோர் = உரிமை+கடன்கொடுத்தோர்+ வங்கிக் கடன் எனும் கணக்கீட்டு சமன்பாட்டில் தருக.
III. மாத முடிவில் வணிகத்தின் இலாபத்தைக் காண்க.
IV. 2021/01/31 திகதியில்,
   i. நடைமுறை சொத்து
   ii. உரிமை
   iii. மொத்த பொறுப்புக்களின் பெறுமதியைக் காண்க.
V. மாத முடிவில் உரிமையாண்மையில் மாற்றம் எவ்வளவு?

29. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் உள்ள ஒவ்வொரு விளைவுக்கும் பொருத்தமான கொடுக்கல் வாங்கல்களை உரிய பெறுமதியுடன் குறிப்பிடுக.

| இலக்கம் | சொத்து | | | | உரிமையாண்மை | பொறுப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | இயந்திரம் | இருப்பு | காசு | கடன்பட்டோர் | | கடன்கொடுத்தோர் | வங்கிகடன் |
| (1) | | | +100000 | | +100 000 | | |
| (2) | +10 000 | | -10000 | | | | |
| (3) | | +4000 | -4000 | | | | |
| (4) | | +5000 | | | | +5000 | |
| (5) | | -2000 | +2500 | | +500 | | |
| (6) | | -1000 | | +2000 | +1000 | | |
| (7) | | | +25000 | | | | +25000 |
| (8) | | | -6000 | | -6000 | | |
| (9) | | | +7500 | | +7500 | | |
| (10) | | | -5500 | | -500 | | -5000 |

உ+ம் (1) = உரிமையாளரினால் ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் ரூபா. 100 000



Commerce and Business Studies Branch